பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 13 | திங்கட்கிழமை | 26.02.2024 | அதிர்வு 209

## அடையாளம் தெரியாத நான்கு சடலங்கள் மீட்பு!

வெவ்வேறு இடங்களில் அடையாளம் தெரியாத 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

குருவிட்ட, பேலியகொட, மாரவில மற்றும் ராகமை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலிருந்து இந்தச் சடலங்கள் 06



# மனிதாபிமான அடிப்படையில் மீனவர்களை விடுவியுங்கள்!

## இலங்கையிடம் இந்தியா வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

**இலங்கை சிறையில் தண்டனை அனுபவித்து வரும் இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுங்கள் என்று இலங்கையிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.** 07

# இங்கு எமது எதிர்காலச் சந்ததிகளாவது நிம்மதியாக வாழக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ சுட்டிக்காட்டு







(கனகராசா சரவணன்)

"இந்த நாட்டைக் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுவிப்பதற்காகத் தமிழர், சிங்களவர் பறங்கியர், முஸ்லிம்கள், மலேயர்கள் உட்பட அனைவரும் ஒன்றிணைந்து 1948 ஆம் ஆண்டில் சுதந்திரத்தைப் பெற்ற போதும் 1972ஆம் ஆண்டு அரசமைப்பை மாற்றி பூரண சுதந்திரத்தைப் 06

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு! 54 வயதான நபர் படுகாயம்!!



கொழும்பு, கொச்சிக்கடை – ஜம்பட்டா வீதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 06




வழக்கில் சிக்கி இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நெருக்கடியைச் சுமுகமாக – இணக்கமாக – தீர்க்கும் முயற்சியில், பாதிக் கிணறு தாண்டியாகிவிட்டதான செய்தி நேற்று மாலை வெளியானது.

சில தரப்புகள் அப்படி நம்பினாலும், எனக்கு என்னவோ இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற கட்சி 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# ரூ. 20 லட்சம் பெறுமதியான சுருக்கு வலைகளும் 3 தோணிகளும் மட்டு. ஏறாவூர் தேடுதலில் சிக்கின

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் கடற் கரைப்பகுதியில் மீன்பிடி அதிகாரிகள் கடற் படையினருடன் இணைந்து நேற்று நடத்திய சோதனை நடவடிக்கையில் சுமார் இருபது லட்சம் ரூபா பெறுமதியான - பெரும் தொகை - தடை செய்யப்பட்ட சட்டவிரோத சுருக்கு வலைகளும் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான 3 தோணிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள மீன்பிடி அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் சிலர் தொடர்ச்சியாக தடைசெய்யப்பட்ட சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் என மீனவர்கள் முறைப்பாடு செய்து வந்தனர்.

இதனடிப்படையில் கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கத்தின் மீன்பிடி அதிகாரிகளான ஆர்.ஜீவானந்தன், ரி. பாலமுகுந்தன், ஆர்.ராஜீவ்கரன், வி. அமர்ராஜ் மற்றும் கடற்படையினர் இணைந்த குழுவினர் நேற்றுக் காலையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஏறாவூர், குடியிருப்புக் கடற்கரை பகுதியை முற்றுகையிட்டு சோதனை நடவடிக் கையை மேற்கொண்டனர்.

இதன் போது அந்தப் பகுதிக் கடற்கரையில் மீன்பிடிப் பதற்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 20 லட்சம் ரூபா பெறு மதியான சட்டவிரோத வலைகளையும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்து சுமார் இரண்டரை லட்சம் ரூபா



பெறுமதியான 3 தோணிகளையும் கைப்பற்றினர். இவற்றுக்கு எவரும் உரிமை கோராத நிலையில் கைப்பற்றப்பட்ட வலைகளையும் தோணிகளையும் கல்லடியிலுள்ள மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத் தின் காரியாலயத்துக்கு அவர்கள் கொண்டு சென்றுள் ளனர்.

இதில் கைப்பற்றப்பட்ட வலைகள் மற்றும் தோணிகளை இன்று திங்கட்கிழமை மட்டு நீதிவான் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

# 15 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்ற 18 வயதுக் காதலனும் சிறியதாயும் கைது

## மட்டக்களப்பு கொக்குவிலில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவில் 15 வயதுச் சிறுமியை கடத்திச் சென்ற 18 வயது இளைஞனையும் அவரது சிறிய தாயாரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வாக ரையில் வைத்துத் தாம் கைது செய்துள் ளமையுடன் சிறுமியை மீட்டு வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர் எனவும் கொக்குவில் பொலிஸார் தெரிவித்த னர்.

இந்தப் பொலிஸ் பிரிவிலுள்ள சிறுமி கடந்த 7 ஆம் திகதி பாடாலைக்குச் சென்ற நிலையில் அவர் வீடு திரும் பாததையடுத்து அவரது உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே.யூ.பி. விமலரத் தினவின் வழிகாட்டலில் பெரும் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி.சசீந்திரன் தலை மையிலான சிவகுமார், பெண் பொலி ஸாரான அனங்சியா, ராதிகா உட்பட்ட பொலிஸ் குழுவினர் விசாரணையை மேற்கொண்டனர்.

இதன் போது குறித்த சிறுமியை அவரது காதலன் வாகரைப் பிரதேசத் திலுள்ள அவனது சிறியதாயாரின் வீட்டிற்குக் கடத்திச் சென்று வைத்துள் ளான் எனக் கண்டறிந்த பொலிஸார் நேற்று முதினம் இரவு வாகரையில் சிறுமி தங்கவைக்கப்பட்ட வீட்டை சுற்றுவளைத்து முற்றுகையிட்டு, சிறு மியை மீட்டமையுடன் சிறுமியைக் கடத் திய குற்றச்சாட்டின் பேரில் 18 வயதுக் காதலன் மற்றும் சிறுமிக்கு இடம் கொடுத்த குற்றச்சாட்டில் 47 வயதுடைய சிறிய தாயார் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இதில் மீட்கப்பட்ட சிறுமியை வைத்தி யசாலையில் அனுமதித்தமையுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக் களப்பு பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலி ஸார் ஆஜர்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 07 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

# இலங்கையின் இளநீர் ரகங்களுக்கு வெளிநாடுகளில் அதிக கேள்வியாம்!





இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற இளநீருக்கு வெளிநாடுகளில் அதிக கேள்வி நிலவி வருவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, இளநீரை ஏற்றுமதி செய்யும் நோக்கில் அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வீரகெடிய பகுதியில் அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி ரணிலின் பணிப்புரைக்கு இணங்க ஒரு லட்சம் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்புகளை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியம் "ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் – 2024/2025" திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, மொத்தமாக இலங்கையில் உள்ள 10 ஆயிரத்து 126 பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில், தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் ஒரு லட்சம் மாணவர்களுக்கு, வருடாந்தம் இந்த நிதியுதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. , இந்த முழுமையான திட்டத்திற்கும் 3600 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலை உபகரணங்கள், பயிற்சி புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்களில் நிலவும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக்குறைந்த வசதிகளின் கீழ் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டு மாணவர்களுக்கு தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்கி, அதன் ஊடாக நாட்டின் மனித வளத்தை மேம்படுத்த முதலீடு செய்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயல்முறை மற்றும் அது தொடர்பான அனைத்து தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கமான www.facebook.com/president.fund மூலம் எதிர்வரும் நாள்களில் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மலையக மக்களை இழிவுபடுத்தியவரை நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

(நீலமேகம் பிரசாந்த்)

"இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளராக இருந்தவர், அப்பதவியில் இருந்து மட்டுமே விலகியுள்ளார். அவரை நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும்."

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் 10 இலட்சத்துக்கும் அதிகமான பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளராக இருந்தவர், மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரைப் பற்றி பேசும்போது மலையகத்தை இழிவுபடுத்திப் பேசியுள்ளார். எனவே, தற்கால சூழ்நிலையில் நடைமுறை வாழ்க்கையைப் புரிந்துகொள்ளாமல் இவ்வாறு சமூகங்களையும் மக்களையும் இழிவுபடுத்திப் பேசும் நபர்களை உடனடியாக நிரந்தரமாகப் பணியிலிருந்து நீக்க வேண்டும்." – என்றார்.



# சுயநலமற்றோரைக் கொண்ட மூதவை தமிழ் கட்சிகளை வழிகாட்ட அவசியம்

## கொடிகாமம் கூட்டத்தில் சிறிநேசன் வலியுறுத்தல்

(பிரபாகரன் டிலக்சன்)

சுயநலவாதிகள் தவிர்ந்த புத்திஜீவிகள், ஆன்மீகத் தலைவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மூத்த பத்திரிகையாளர்களைக் கொண்ட ஒரு மூதவை எங்களுக்கு இருக்க வேண்டும். அந்த மூதவை தமிழ் கட்சிகளின் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

'தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்' எனும் தொனிப் பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களுடைய தமிழ்த் தேசியப் பயணத்தில் பல்வேறுவிதமான தடைகள் உள்ளன. அத் தடைகளை அகத்தடை, புறத்தடை எனப் பிரித்து நோக்கலாம். அந்த தடைகளை நாங்கள் முழுமையாக இனம்காணவேண்டும்.



எங்களுக்கு சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு ரீதியாக பல தடைகள், சவால்கள் இருக்கின்றன. புறத்தடைகள் எனும்போது தமிழினத்தைச் சிதைக்க வேண்டும், அவர்களின் ஒற்றுமையை சிதைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பேரினவாதம் பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பேரினவாதம் எமது ஒற்றுமையைச் சிதைப்பதற்காக பல வழிகளை கையாள்கிறது. இவை எல்லாவற்றையும் கடப்பதற்கு எமக்குப் பலமான தமிழ்த்தேசிய பற்றுறுதி இருக்க வேண்டும். சிலரைப் பார்த்தால் தமிழ் தேசிய அரசியலோடு பயணிப்பவர்களாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் அவர்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் தமிழ் தேசியம் இருப்பதில்லை. இப்படியானவர்களோடு கூட பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

சமூக ரீதியாக எங்களுக்கு இடையில் பல்வேறுபட்ட சாதிய முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகளை வைத்துக் கொண்டும் எங்களைப் பிரித்தாள நினைக்கிறார்கள். மதங்களை வைத்துக்கொண்டு பிரித்தாள நினைக்கிறார்கள். எனவே நாம் தமிழ்த்தேசியத்தோடு ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

தமிழ் தேசியத்துக்கு எதிராக வரும் தடைகளை தாண்டுவதற்கு புத்திஜீவிகளைக் கொண்ட ஒரு மூதவை இருக்க வேண்டும். அதாவது சுயநலவாதிகள் தவிர்ந்த புத்திஜீவிகள், ஆன்மீக தலைவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மூத்த பத்திரிகையாளர்களைக் கொண்ட ஒரு மூதவை எங்களுக்கு இருக்க வேண்டும். அந்த மூதவை தமிழ் கட்சிகளை வழிகாட்டியாக இருக்க வேண்டும். - என்றார்.




# தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் குறித்து அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தத் தீர்மானம்

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்க தேசிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை எதிர்வரும் 27 மற்றும் மார்ச் 06 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, தேர்தலுக்கு செலவிடப்படும் பணம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதுவரை ஒரு தேர்தலும் நடத்தப்படவில்லை.

அதன் காரணமாக இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு உரிய புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் இந்த கூட்டம் நடத்தப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.



# யாழ். பல்கலைக்கழகத்துக்கு மத்திய வங்கி ஆளுநர் விஜயம்

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவை அவரது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்து, சமகால விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடிய இந்தக் குழுவினர் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுடன் அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பிலும் விளக்கமளித்ததோடு இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க பதிலளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மத்திய வங்கி ஆளுநரோடு, மத்திய வங்கியின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் வட பிராந்திய முகாமையாளர் உட்பட எட்டுப் பேர் கலந்து கொண்டனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரமுகர்களின் ஆலோசனைக் கூட்டத்தில், கட்சிக்கு எதிராக வழக்கு போட்ட தரப்பினருடன் பேசி, சுமுகமான தீர்வைக் காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய மூவர் கொண்ட குழு ஒன்று தெரிவாகி இருந்தது தெரிந்ததே.

இதுவரை காலமும் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய மருத்துவர் சத்தியலிங்கம், மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரே அக்குழுவின் உறுப்பினர்கள்.

இக்குழுவுக்கு கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவராகப் பணியாற்றும் சி.வி.கே.சிவஞானத்தின் பெயரை அக்கூட்டத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன் பிரேரித்த போதும் அதில் தாம் இடம்பெற விரும்பவில்லை என்று சி.வி.கே.சிவஞானம் அப்போது கூறி, அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்து இருந்தார்.

எனினும் மற்றைய மூவருடன் அவரும் சேர்ந்து நேற்று திருகோணமலைக்குச் சென்று திருகோணமலையில் கட்சிக்கு எதிராக வழக்கு போட்ட கட்சி உறுப்பினர் பரா சந்திரசேகரத்தை திருகோணமலை ஆயர் மற்றும் திருகோணமலைப் பிரமுகர்கள் இரண்டொருவர் முன்னிலையில் சந்தித்துப் பேசினார்.

தாம் போட்ட வழக்கை நிபந்தனை இன்றி விலக்கிக் கொள்ள வழக்காளி இணங்கினார் என்ற செய்தி நேற்று மாலையில் பரவியது.

ஆனால் தேடிப் பார்த்ததில், கடந்த மாதம் 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்று முடிந்த பொதுச்சபைக் கூட்டத்தில் இடம்பெற்ற நிர்வாகிகள் தெரிவை அப்படியே தொடர்வோம் என்ற உறுதி மொழியை ஆயரும் ஏனையோரும் தலையிட்டு, நம்பகரமாகப் பெற்றுத் தந்தால் மட்டுமே அந்த நிபந்தனையின் அடிப்படையில் வழக்கைக் கை வாங்கலாம் என்றே பரா சந்திரசேகரம் ஒரேடியாக வலியுறுத்தினார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அப்படி உறுதிமொழி தரப்படும் என்ற அடிப்படையில் வழக்கை விலக்கிக் கொள்ள அவர் இணங்கினார் என்றும், அத்தகைய உறுதிமொழியை யார் தருவார்கள், யார் அதை உறுதிப்படுத்துவார்கள் என்ற விவரம் ஏதும் தெரியவில்லை என்றும் அந்தத் தரப்புகள் மேலும் கூறின.

இந்த ஏற்பாடு குறித்து உடனடியாக சுமந்திரனுக்கு தெரிவிக்கப்பட்டதாக அறிந்து அது குறித்து அவரிடமேயே கேட்டேன்.

"ஆம். மருத்துவர் சத்தியலிங்கம் தொலைபேசி ஊடாக இந்த விடயத்தைக் குறிப்பிட்டு என் கருத்தைக் கேட்டார். இதில் நான் கருத்துக் கூற என்ன இருக்கின்றது என்று கேட்டேன். வழக்கு போட்ட தரப்பு நான் அல்லன். வழக்குப் போட்டவருடன் உடன்பாடு கண்டு, இணக்கமாக தீர்த்தால் மகிழ்ச்சியே. இவ்விடயங்களில் என் நிலைப்பாடு யாது என்பதை இந்த வழக்குகள் எல்லாம் வர முன்னரே எழுத்தில் நான் தெரிவித்து விட்டேன். அதுதான் இன்றும் எனது நிலைப்பாடு. வழக்கை சுமுகமாகத் தீர்ப்பதானால் நல்லது. அதற்கு என் கருத்தை – நிலைப்பாட்டை – பார்த்திருக்கத் தேவையில்லை.

"வழக்குக் கை வாங்கப்பட்டு உடனடியாக கட்சியின் தேசியமாடு மாநாடு நடத்தப்படுமானால் அதற்கு முதல் நாள் மாலையில் கட்சிப் பிரமுகர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை உத்தியோகப் பற்றற்ற முறையில் கூட்டுவது குறித்தும் சத்தியலிங்கம் எனக்குத் தகவல் கூறினார்" – என்றார் சுமந்திரன்.

இந்த விடயம் – இணக்கம் – தொடர்பில் சிறீதரன் மற்றும் மட்டக்களப்பு அணியினரின் நிலைப்பாடு யாது என்று சில தரப்புகள் மூலம் நாடி பிடித்துப் பார்த்தேன்.

27ஆம் திகதி திருகோணமலையில் நடந்து முடிந்த பொதுக்குழு கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் என அறிவிக்கப்பட்டோரின் பட்டியலை அப்படியே மாற்றாமல் தொடர்வதற்கு அவர்களுக்கும் இணக்கம் உண்டு. ஆனால் ஒரு சிறு மாற்றத்தை அவர்கள் விடாப்பிடியாக இன்னும் வலியுறுத்துகிறார்கள்.

தற்போதைய நிர்வாகிகளுக்கு மேலதிகமாக கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவராக கோடீஸ்வரன் மற்றும் துணைப் பொதுச்செயலாளராக சிறீநேசன் இடம் பெற வேண்டும் என்பதுதான் அவர்கள் வற்புறுத்தும் விடயம். அதாவது இப்போது சிரேஷ்ட துணைத் தலைவராக தெரிவாகி இருக்கும் சி.வி.கே.சிவஞானத்துக்கு மேலதிகமாகவும், தற்போது துணைப் பொதுச் செயலாளராகத் தெரிவாகி இருக்கும் குலநாயகத்திற்கு மேலதிகமாகவும் இந்த நியமனம் இடம்பெற வேண்டும் என்பது சிறீதரன் தரப்பின் நச்சரிப்பு.

ஆனால் யாப்புப்படி இந்த இரண்டு பதவிகளிலும் ஒவ்வொருவர்தான் நியமனமாக முடியும்.

யாப்பின் பிரகாரம் கட்சியை நடத்தவில்லை என்று குற்றம் சுமத்தி தொடுக்கப்பட்ட வழக்கை, முடிவுக்கு கொண்டு வருவதற்கு – கைவாங்க வைப்பதற்கு – இன்னொரு யாப்பு மீறலை வற்புறுத்துவது என்ன நியாயம்? எனக்கு விளங்கவில்லை.

வழக்குத் தவணைக்கு இன்னும் மூன்று நாள்கள்தான் உள்ளன. அதற்குள் இணக்கத் தீர்வு வருமா? கோணேசப்பெருமானுக்குத்தான் வெளிச்சம்...!

## கொழும்பில் துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த 54 வயதான நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களைத் தேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அடையாளம் தெரியாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மீட்கப்பட்டுள்ளன.

குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பின்வல பகுதியில் உள்ள கங்கையில் நிர்வாணமாகச் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது . 35 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட ஆணின் சடலமே மீட்கப்பட்டுள்ளது . இந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை .

பேலியகொட 4 ஆம் மைல் கல்லுக்கு அருகில் பட்டியசந்தி பகுதியில் ரயிலால் மோதுண்டு உயிரிழந்த நிலையில் 35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது . இவர் வெள்ளை மற்றும் கறுப்பு நிறத்திலான சேட்டும், கறுப்பு நிறத்திலான காற்சட்டையும் அணிந்திருந்துள்ளார். வலது கையில் பச்சை குத்தியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர் .

மாரவில பகுதியிலுள்ள சதுப்புநிலத்தில் இனந்தெரியாத நபர் ஒவரின் சடலம் நிர்வாணமாக மீட்கப்பட்டுள்ளது. 55 முதல் 60 வயதுடைய ஆணின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

ராகமை – கடவத்தை பகுதியில் தனியார் நிறுவனமொன்றுக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் அடையாளம் தெரியாத பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவர் சாம்பர் நிற புடவை மற்றும் கறுப்பு கை சட்டை அணிந்திருந்துள்ளார். உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## இங்கு எமது எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பெற்றோம். இந்த ஒற்றுமையை அரசியல்வாதிகள் பிரித்து நாசமாக்கி அரசியல் செய்தார்கள். இதனால் நாட்டில் சமாதானம் இல்லாம் போய்விட்டது. எனவே, எமது எதிர்காலச் சந்ததிகளாவது நிம்மதியாக வாழக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள சகவாழ்வு சங்கங்களுக்கு மாவட்ட மட்ட ஆலோசகர் சபை அமைக்கும் நிகழ்வும், அவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வும் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அரசியல் குழப்பம் காரணமாக மிகவும் துன்பகரமான காலத்தில் இருந்திருக்கின்றோம். இந்த நாட்டிலே நாங்கள் பிறந்தது அதிஷ்டமாக இருந்தபோதும் கடந்த 40 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த நாட்டில் நாங்கள் பிறந்தது துரதிஷ்டமானது என நினைத்தோம்.

கடந்த காலங்களில் நாங்கள் கிராமங்களை அழித்தோம், குண்டு வைத்தோம், எரித்தோம் என்று வன்முறைகளில் ஈடுபட்டோம். அப்படியான ஒரு நாட்டில் தான் இவ்வளவு காலமாக வாழ்ந்து வருகின்றோம்.

அரசியல்வாதிகள் செய்த பெரும் தவறால் இந்த நாட்டில் சமாதானம் இல்லாம் போய்விட்டது

ஜனநாயகம் என்பது நாட்டில் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதைத்தான் குறிப்பிடுகின்றது இருந்தபோதும் ஜனநாயகத்துக்கு எதிராக அரசியல் தலைவர்கள் சிலர் செயற்படுகின்றனர்.

நாங்கள் இந்த நாட்டை அழித்து நாட்டைப் பயன்படுத்தாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, நாட்டில் எல்லோரும் ஒன்றிணைந்து எதிர்காலச் சந்ததிகளாவது நிம்மதியாக வாழக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு." – என்றார்.

# ஜே.வி.பியினரை நேரில் அழைத்து புத்தியுரைத்த இந்தியாவுக்கு நன்றி

## நிமல் லன்சா எம்.பி. தெரிவிப்பு



"இந்து - லங்கா உடன்படிக்கை முதற்கொண்டு எட்கா வரை இந்தியாவுடனான அனைத்து உறவுகளையும் கடந்த 40 ஆண்டு காலமாக எதிர்த்து வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இன்று அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது. இவ்வாறு ஜே.வி.பி.யை அழைத்து புத்தியுரைத்தமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுகின்றோம்."

- இப்படி புதிய அரசியல் கூட்டணியின் ஸ்தாபகர் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிமல் லன்சா தெரிவித்தார்.

உத்தேச பொதுத் தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற மோதலில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸவுடன் தற்போது நாமல் ராஜபக்ஷவும் இணைந்துள்ளார் என்று சுட்டிக்காட்டிய நிமல் லன்சா, தமது புதிய அரசியல் கூட்டணி தெளிவான வேலைத்திட்டத்துடன் ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இதுவரை காலமும் பொய் வாக்குறுதிகளை வழங்கி, அவற்றை நிறைவேற்றுவதற்காகப் பணத்தை அச்சிட்டு நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கிய அரசியல் கலாசாரமே பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால், புதிய கூட்டணியின் நோக்கம் அதுவல்ல. எதுவானாலும் உண்மையைக் கூறி மக்களுக்கு யதார்த்தத்தைப் புரியவைப்பதே எமது நோக்கமாகும்.

ஜே.வி.பி.யும் ஐக்கிய மக்கள் சக்தியும் மேடைகளில் ஏறி பொய்களையே கூறிக்கொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சி தலைவர் தற்போது வழங்கி வரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாட்டிலுள்ள பணம் போதாது. எனவே, இவ்வாறு வார்த்தைகளால் அரசியல் செய்பவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தகுதியானவர்களே ஆட்சியைப் பொறுப்பேற்க வேண்டும்.

நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்ற தெளிவான வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. எனவே, எம்முடன் கைகோர்த்து எமக்கு ஆதரவளிக்குமாறு மக்களிடம் கோருகின்றேன். பொதுத் தேர்தலின் பின்னர், எதிர்க்கட்சி தலைவர் பதவி யாருக்கு என்ற மோதலில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸவுடன் தற்போது நாமல் ராஜபக்ஷவும் இணைந்துள்ளார். இவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக மோதிக்கொண்டிருக்கட்டும். நாம் நாட்டைக் கட்யெழுப்புவோம்.

மே மாதத்துக்குள் இலட்சக்கணக்கான ஆதரவாளர்களை எம்முடன் இணைத்துக்கொள்வோம். அவர்கள் அனைவரையும் கொழும்புக்கு அழைத்து பாரிய கூட்டத்தை நடத்துவோம். முடிந்தால் எமக்கு நிகராக கூட்டத்தை நடத்துமாறு ஜே.வி.பி.க்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் சவால் விடுக்கின்றோம். மறுபுறம் ஜே.வி.பி. என்ன பேசுவதெனத் தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றது.

கடந்த 40 ஆண்டு காலமாக இந்தியாவுடனான உறவை ஜே.வி.பி. எதிர்த்து வந்தது. இந்து - லங்கா, எட்கா என அனைத்தையும் எதிர்த்தது. ஆனால், அவர்களை அழைத்து அவர்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுகின்றோம். நாம் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். அந்தச் சந்தர்ப்பங்களில் இந்தியாவுக்கு எதிராகப் போலி பிரசாரங்களை மேற்கொண்டு வந்த ஜே.வி.பி. இன்று "இந்தியாவும் மாறிவிட்டது, நாமும் மாறிவிட்டோம்" என்று கூறுகின்றது. இதுவே அவர்களின் உண்மையான தோற்றம்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள தூய்மையான அரசியல்வாதிகள் எம்முடன் இணைவர். அனைவருடனும் இணைந்து வெற்றிக்கான எமது பயணத்தை மக்களின் ஆதரவுடன் தொடர்வோம்."

- என்றார்.

## மனிதாபிமான அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான விசேட பேச்சு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை சிறையில் 5 இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழக மீனவர்களும், தமிழக மக்களும் கச்சதீவு திருவிழாவைப் புறக்கணித்தும் உள்ளனர். இந்நிலையிலேயே இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் இலங்கைக் கடற்றொழில் அமைச்சருடன் இந்தியத் தூதுவர் நேற்று விசேட பேச்சு நடத்தினார்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியா - இலங்கை இடையே ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இரு நாட்டு மீனவர்களின் நலன் சார்ந்து மனிதாபிமான முறையில் மீனவர் பிரச்சினையை அணுகுமாறு இந்தியத் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

அதேவேளை, இலங்கை சிறையில் தண்டனை அனுபவித்து இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் இந்தியத் தூதுவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "இந்திய மீனவர்கள் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறையிடப்பட்டுள்ளமையால் அவர்களை விடுவிக்கும் அதிகாரம் எனக்குக் கிடையாது. இது தொடர்பில் இனி ஜனாதிபதி மாத்திரமே முடிவெடுக்க முடியும். அதேநேரம் இலங்கை மீனவர்களின் விருப்பத்துக்கு மாறாக என்னால் முடிவெடுக்க முடியாது" - என்று கூறினார்.

வடக்கு மாகாணத்தில் இந்தியாவால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## படை விட்டோடிகள்: புதிய சிக்கல்!

அதிக ஆரவாரம் இல்லாமல், பெரும் சத்தம் சந்தடி இன்றி, ஒரு செய்தி தென்னிலங்கையில் வெளியாகியிருக்கின்றது.

இராணுவத்தை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் தப்பி ஓடிய சுமார் 25 ஆயிரம் பேரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கானநடவடிக்கைகளை இராணுவமும் பொலிஸும் ஆரம்பித்திருக்கின்றன என்பதுதான் அந்தச் செய்தி.

அது குறித்து - அந்தச்செய்தி குறித்து - தென்னிலங்கையில் அதிக கரிசனையோ, சிரத்தையோ காட்டப்படவில்லை. பத்தோடு பதினோராவது செய்தியாக அது அவதானிக்கப்பட்டு விடுபட்டுப் போய்விட்டது.

ஆனால், இந்த விடயத்தைப் பாதுகாப்புத் தரப்புக்கள் மிக முக்கிய விவகாரமாகக் கையில் எடுத்திருக்கின்றன என விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்படிப் படை விட்டோடிகள் பிரச்சினை யுத்த காலத்தில் மிகப்பெரிய விவகாரமாகவும் சர்ச்சையாகவும் இருந்தமை தெரிந்தது தான்.

யுத்தத்தின் கோரத்தால் - அகோரத்தால் - படைகளை விட்டோடுவோர் பற்றிய விவகாரம் புரிந்துகொள்ளத் தக்கதே. அப்படிப் படைகளை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் தப்பி ஓடுபவர்கள் தொடர்பில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் சட்டங்களுக்கு அமைவாக கடும் நடவடிக்கைகள் அப்போது எடுக்கப்பட்டன.

அப்போது நிலைமை வேறு. யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில், படைகளுக்கு அதிக துருப்புகள்தேவைப்படும்சமயத்தில், சம்பளத்துடன் பயிற்சியும் பெற்று, யுத்த முன்அனுபவத்தையும் சுவீகரித்துக் கொண்டுள்ளவர்களை இழப்பது என்பது அரசு தரப்புக்கு யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் மிகப் பாதிப்பைத் தரும் விவகாரமாக இருக்கும். அதனால் அப்போது அந்த விடயத்தில் அரசு இறுக்கமாக இருந்தது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. அரசின் பார்வையில் அது நியாயமானதே.

ஆனால் இப்போது நிலைமை வேறு. ஊதிப் பெருத்த படைகளை வைத்துக்கொண்டு, சம்பளம் கொடுக்க முடியாமல் அரசும் இராணுவமும் அல்லாடுகின்றன. இந்தச் சூழ்நிலையில் படைவீட்டோடிகள் குறித்து அரசு அதிகம் கவலைப்படத் தேவையில்லை. சம்பளமும் மிச்சம். சேவைக் காலப் பிற்கொடுப்பனவு மற்றும் படையினருக்குரிய பிற வசதிகள், சிறப்புரிமைகளை வழங்கவும் தேவையில்லை. பொருளாதார நெருக்கடியால் மோசமாக பாதிப்புற்றிருக்கும் நாட்டில், அரச ஊழியரின் வேதனத்தை குறைக்கும்படி சர்வதேச நாணய நிதியமும் கடும் அழுத்தம் தருகின்றது. இந்த நிலையில் படைவீட்டோடிகளின் மாதக் கொடுப்பனவுகளைச் செலுத்தாமல் இருப்பது என்பது அரசுக்கு நன்மை பயக்கும் விடயம்தான். அரச சம்பளம் படைவிட்டோடிகளினால் கணிசமாகக் குறையும்தானே?

கடந்த ஐந்து வருடங்களில் இராணுவத்திலிருந்து 54,000 பேர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடித் தப்பி இருக்கின்றனர். அவர்களில் சுமார் பத்தாயிரம் பேர் பின்னர் சேவைக்கு மீண்டுள்ளனர். 18,000 பேர் பின்னர் திரும்பிச் சட்டரீதியாகச் சேவையிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டுள்ளனர். மிகுதி சுமார் 26,000 பேர் குறித்து இப்போது அதிக சிரத்தையும் கரிசனையும் செலுத்தப்படுகின்றது.

சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. அப்படி அவர்கள் குறித்து பாதுகாப்புத் தரப்புகள் சிரத்தை - கரிசனை - கொள்வதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. படைவிட்டோடிகள் தொடர்பில் இரண்டு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

ஒன்று - இராணுவப் பயிற்சிகள், ஆயுதங்களை லாவகமாகக் கையாளும் தகைமைகளோடு அப்படிப் படைவிட்டோடிகளாக சமூகத்தில் மறைந்து திரிபவர்களையே, பாதாள உலகக் குழுவினர் தங்கள் உறுப்பினர்களாகவும் உயர்ந்த கொடுப்பனவுடன் சேவைகளில் அமர்த்தி, மறைமுக வன்முறை வேலைகளை முன்னெடுக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அடுத்ததுதான் மிக முக்கிய விடயம். இப்படியான படைவிட்டோடிகளுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி, அவர்களுக்குப் பெருந்தொகைக் கொடுப்பனவுடன் - வெளிநாட்டு வேதனத்துடன் - வேலை என்று குறிப்பிட்டு, இப்போது யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் உக்ரைன் மற்றும் ரஷ்ய இராணுவத்தில் கூலிப்படைகளாகச் சேர்க்கும் ஒரு சதித்திட்டமும் இரகசியமாக அரங்கேறுவதாக அரசு சந்தேகிக்கின்றது.

சுளையாகப் பெருந்தொகை சம்பளமாக - வேதனமாக - கிடைக்கும் என்ற ஆசையில் படை வீரர்களும் இராணுவத்தில் இருந்து நைஸாக வெளியேறி, இந்தக் கூலிப் படைகளில் இணைவதற்குக் கூட்டிச் செல்வோரோடு கைகோர்க்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அது குறித்து அரசல் புரசலாகக் கதைகள் வெளியான போதிலும், ஆணித்தரமான செய்திகள், புள்ளி விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. ஆனால் ரஷ்ய - உக்ரைன் களமுனைச் செய்திகள் இந்த விடயம் பற்றிய சில தகவல்களை உறுதிப்படுத்துகின்றன என சில செய்தித் தரப்புகள் கூறுகின்றன.

அதனால்தான் படைவிட்டோடிகள் விவகாரம் குறித்து வெளியே அதிகம் அலட்டிக் கொள்ளாமல், இவ்விடயத்தைப் பாதுகாப்புத் தரப்புகள் முனைப்பாக நோண்டத் தொடங்கியிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

# எனது பல வருட ஆசை நிறைவேறியது துவாரகா வழிபாடு குறித்து மோடி மகிழ்ச்சி



"என் பல வருட ஆசை நிறைவேறியது" என்று கடலுக்குள் மூழ்கியதாக கூறப்படும் துவாரகாவில் வழிபட்டது குறித்து பிரதமர் மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் துவாரகாவில் 4150 கோடி ரூபா மதிப்பிலான பல வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டிவைத்தார்.. ஓகா நிலப்பரப்பையும் பேட் துவாரகாவையும் இணைக்கும் சுதர்சன் சேது பாலம், வடினார் மற்றும் ராஜ்கோட் – ஓகா, ராஜ்கோட் – ஜெட்டல்சர்– சோம்நாத் மற்றும் ஜெட்டல்சார் – வான்ஸ்ஜாலியா ரயில் மின்மயமாக்கல் திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

அதேபோல், தேசிய நெடுஞ்சாலை-927 இன் தோராஜி –ஜம்கண்டோர்னா – கலவாட் பகுதியை அகலப்படுத்துவதற்கும், ஜாம்நகரில் உள்ள பிராந்திய அறிவியல் மையம் மற்றும் ஜாம்நகரில் உள்ள சிக்கா அனல் மின் நிலையத்தில் வெளியேறும் உமிழ்வுகளிலிருந்து கந்தகக் கலவைகளை அகற்றும் செயல்முறை அமைப்பு நிறுவலுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக, கடலுக்குள் மூழ்கியதாக கூறப்படும் துவாரகா நகருக்கு சென்று பூஜை செய்ய விரும்பிய பிரதமர் மோடி, நேற்று ஸ்கூபா டைவிங் வீரர்கள் உதவியுடன் படகில் அரபிக் கடலுக்குள் பயணித்தார்.

துவாரகா நகரை உருவாக்கியவராக நம்பப்படும் கடவுள் கிருஷ்ணருக்கு மயிலிறகு விருப்பமான ஒன்று, காவி உடை அணிந்து தனது கையில் மயிலறகுடன் – ஸ்கூபா டைவிங் கருவிகளை உடலில் பொருத்திக் கொண்டு பிரதமர் மோடி கடலுக்கடியில் சென்று தரிசனம் செய்தார். அவருக்கு பாதுகாப்பாக ஏனைய ஸ்கூபா டைவிங் வீரர்கள் உடன் சென்றனர்.

ஆழ்கடலின் தரைப்பகுதிக்குள் சென்ற பிரதமர் மோடி அங்கு தான் கொண்டு சென்ற மயிலறகை தரையில் வைத்து சிறப்பு பூஜை செய்தார். அதன்பின் தரைப்பகுதியை தொட்டு வணங்கிய பிரதமர் மோடி கடலில் இருந்து வெளியே வந்தார். இதுதொடர்பான போட்டோ, வீடியோக்கள் தற்போது இணையதளங்களில் வெளியாகி வேகமாகப் பரவி வருகின்றன.

நீரில் மூழ்கிய துவாரகா நகரத்தில் பிரார்த்தனை செய்த மறக்க முடியாத தருணம் குறித்து அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் பேசினார். அந்தக் கோயிலின் தொல்லியல் மற்றும் வேத முக்கியத்துவம் குறித்து பிரதமர் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"துவாரகா பகவான் விஸ்வகர்மாவால் கட்டப்பட்டது என்பது நம்பிக்கை. துவாரகா நகரம், சிறந்த நகரத் திட்டமிடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. நீரில் மூழ்கிய நகரத்துக்குள் இறங்கியதும் தெய்வீகத்தின் பேராற்றல் ஆட்கொண்டது. பிரார்த்தனை செய்தேன், என்னுடன் எடுத்துச் சென்ற மயில் இறகுகளை வழங்கினேன்.

நீரில் மூழ்கிய துவாரகா நகரத்தைப் பற்றி நான் கேள்விப்பட்ட காலத்திலிருந்து, அங்கு சென்று தரிசனம் செய்ய விரும்பினேன். பல வருடங்களாக இருந்த என் ஆசை நிறைவேறியது." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# 400 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்: தொண்டர்களிடம் அமித் ஷா வலியுறுத்தல்




400 இற்கும் மேற்பட்ட தொகுதிகளை வென்று கொடுத்து மூன்றாவது முறையாக மோடி அரசு அமைய உறுதியேற்றுக்கொள்ளுங்கள் என்று பா.ஜ.க. தொண்டர்களிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் கஜுராஹோவில் பா.ஜ.க. பூத் கொமிட்டி ஊழியர்கள் மத்தியில் அமித் ஷா உரையாற்றுகையில்,

"காங்கிரஸின் 10 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் 12 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான ஊழல்களில் ஈடுபட்டது. காங்கிரஸ் என்றால் ஊழல், ஊழல் என்றால் காங்கிரஸ். வரவிருக்கும் மக்களவை தேர்தலில், 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று மத்தியில் மோடி தலைமையிலான ஆட்சியை மீண்டும் அமைக்க வேண்டும். இதன்மூலம், மோடியின் தலைமையில் பாரதத்தை வல்லரசாகவும், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாகவும் மாற்ற வேண்டும்.

கோயிலை கட்டுவோம் என்று பா.ஜ.க. கூறுகிறது . ஆனால் கட்டும் திகதியைகூட மக்களுக்கு பா.ஜ.க. அறிவிக்காது என்று ராகுல் காந்தி பா.ஜ.கவை விமர்சித்து பேசியிருந்தார். ஆனால் இப்போது சொன்னபடி, மோடி அரசாங்கத்தின் கீழ் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டது. பொது மக்களுக்கு அளித்த ஒவ்வொரு வாக்குறுதியையும் பா.ஜ.க. நிறைவேற்றுகிறது." – என்றார்.

# 31 ஆயிரம் வீரர்கள் கொல்லப்பட்டனர் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தகவல்





ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பின் தொடக்கத்தில் இருந்து 31,000 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டனர் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தப் போரில் முப்பத்தோராயிரம் உக்ரைன் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். புடினும் அவரது வஞ்சக வட்டமும் பொய்யாகக் கூறுவது போல் 300,000 அல்லது 150,000 அல்ல. ஆனால் அந்த இழப்புகள் ஒவ்வொன்றும் எங்களுக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

போரில் மொத்தம் 180,000 ரஷ்யர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது வீரர்களில் எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் 500,000 ரஷ்ய வீரர்கள் காயமடைந்தவர்கள் அல்லது காணாமல் போயுள்ளனர் என்பது எனக்குத் தெரியும்.

ஏனெனில் அது எத்தனை உக்ரைனிய வீரர்கள் போர்க்களத்தை விட்டு வெளியேறினர் என்பது பற்றிய தகவலை ரஷ்யாவிற்கு வழங்கும்.

எத்தனை உக்ரைனிய வீரர்கள் காணவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான உக்ரைனியர்களைப் பற்றி எங்களுக்குத் தெரயும்.” – என்றார்.

# ஈபிள் கோபுரம் மீண்டும் திறப்பு



தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாக ஆறு நாள்கள் மூடப்பட்டிருந்த , பிரான்சின் தலைநகர் பாரிஸில் உள்ள புகழ்பெற்ற ஈபிள் கோபுரம் பார்வையாளர்களுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த திங்கட்கிழமை ஈபிள் கோபுரத்தை அண்மித்த பகுதியில் பணிபுரிந்த ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதன் காரணமாக கோபுரத்தை பார்வையிட முடியாமல் போனதாகவும், 06 நாள்களுக்குப் பின்னர் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக 03 மாதங்களுக்குள் ஈபிள் கோபுரம் பார்வையாளர்களுக்காக மூடப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

# பாப்பரசர் பிரான்சிஸுக்கு காய்ச்சல்!





பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 87) லேசான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார் என வத்திக்கான் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து பாப்பரசர் பங்கேற்க இருந்த நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என வத்திக்கான் தேவாலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வத்திக்கான் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில்,

“லேசான காய்ச்சல் காரணமாக பாப்பரசர் பிரான்சிஸ் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் அவரது அன்றாட நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அவரது உடல்நிலை சீராக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் பாபர்பரசருக்கு குடலிறக்கத்தை சரிசெய்வதற்கான அறுவை சிகிச்சை நடந்தமை குறிப்பிடத்தக்கது.



# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் கண்டியில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி – அணியவத்தை பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனஒ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# வீதி அபிவிருத்தி திட்டம் 29 ஆம் திகதி ஆரம்பம்

ஒரு லட்சம் கிலோ மீட்டர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ்.வீரகோன் தெரிவித்துள்ளார்.

මාර්ග සංවර්ධන අධිකාරිය
Road Development Authority
வீதி அபிவிருத்தி அதிகார சபை



# ஆற்றில் மூழ்கிச் சிறுவன் பலி

லிந்துலை – நாகசேனை பகுதியில் நேற்று பிற்பகல் ஆற்றில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை பிரதேசத்தில் இருந்து சிறுவர்கள் சிலர் லிந்துலை – நாகசேனை பகுதிக்கு சென்று ஆற்றில் நீராடியுள்ளனர்.

அதன்போது, அவர்களில் ஒருவர் தண்ணீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில், பிரதேச வாசிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் மேற்படி சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய ஒருவரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ‘ஆரோக்கிய சமூகமாய் எழுவோம்!’ நேற்று நடந்த யாழ் மரதன் - 2024

## பதினொன்றரைக் கிலோ மீற்றரை வெற்றிகரமாக ஓடி முடித்தார் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி

‘ஆரோக்கிய சமூகமாய் எழுவோம்!’ என்ற தொனிப்பொருளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய ‘யாழ் மரதன் 2024’ நீண்டதூர ஓட்டப் போட்டி நேற்றுக் காலை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி, வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரி மைதானத்தில் முடிவடைந்தது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமான மரதன் காலை 7 மணியளவில் வட்டுக் கோட்டை தொழிநுட்பக் கல்லூரி மைதானத்தை சென்றடைந்துள்ளது. நிகழ்வுக்கு பிரதான அனுசரணையை காவேலி கலாமன்றம் வழங்கியிருந்தது.

ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவத்சி நோக்காகக் கொண்ட இந்த மரதன் போட்டியில் 170க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொணடனர். மரதன் ஓட்டத்தில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியும் கலந்து கொண்டு ஓடி முடித்துள்ளார்.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 50 நிமிடங்களில் ஒருவரும், பெண்கள் பிரிவில் 1 மணித்தியாலம் 10 நிமிடத்தில் ஒருவருமாக சுமார் 11.5 கிலோ மீற்றரை ஓடி முடித்தமை குறிப்பிடத்தக்கது.

























# பசுமை இயக்கத்தின் அறிவொளி நிகழ்ச்சி!

## மல்லாகம் கல்லாரை கிராமத்தில்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் கல்லாரை கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் தொடர்பான அறிவைப் புகட்டுவதன் ஊடாகச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சுற்றுச் சூழல் பாது காப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்கில் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே கல்லாரை வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் மிதுசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

வளர்மதி சனசமூக நிலையத்தின் உபதலைவர் ஐ. குணசீலன், ஆலோசகர் சி. நாகதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கல்லாரைக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் பங்கு பற்றிய இந்த நிகழ்வில் மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அப்பியாசக் கொப்பிகள் கற்றல் தேவைகளின் பொருட்டு வழங்கப்பட்டன.

இதற்கான நிதி அனுசரணையைக் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.











# வவுனியாவில் உமாமகேஸ்வரனின் சமாதி அருகில் புளொட் போராளி ராகவனின் உடல் நல்லடக்கம்

(கே.வசந்தன்)

வவுனியா, கோவில்குளம், சிவன் கோவிலருகில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் நினைவு இல்லத்தில் உள்ள அவரது சமாதி அருகில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மூத்த தலைவர் ராகவனின் உடலும் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளருமான ராகவன் அல்லது 'ஆர்.ஆர்.' என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதர் அண்மையில் சுகயீனம் காரணமாக மரணமடைந்திருந்தார்.

அவரது உடல் வவுனியா, கோவில்குளம், சிவன் கோவிலருகில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் சமாதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி உரைகளையும் ஆற்றினர். அதன் பின் மறைந்த ராகவனின் உடல் கோவில்குளத்தில் உள்ள உமா மகேஸ்வரன் சமாதி அருகில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் ஊடகப் பேச்சாளர் துளசி, ஈ.பி.டி.பி. கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிறிகாந்தா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப.கஜதீபன், செந்தில்நாதன் மயூரன் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள், புளொட் அமைப்பு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.













# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2024




இன்று அனைத்தும் சுமூகமாக நடக்கும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றியின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் பிரகாசமான வளர்ச்சி காணப்படும். பணியிடத்தில் உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பையும் காதலையும் வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நண்பர் வீட்டு திருமண விழாவில் கலந்து கொண்டு இருவரும் இனிமையான தருணங்களைக் கழிப்பீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக காணப்படும். உங்கள் பணத் தேவைகளை உங்களால் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




எதிர்மறை விளைவுகளை தடுக்க இந்து எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும்.




இன்று உங்கள் இலக்குகள் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நினைத்தாலும் அதனை செய்து முடிப்பதில் பல கடினங்களை எதிர் கொள்ள நேரும். சோதனையான இந்த தருணத்தில் பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் கிட்டாது. பணிகள் முடிக்கப்படாமல் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. குழந்தைகள் நலனுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். சமநிலையான அணுகுமுறை காணப்படும். நீங்கள் சரியான முடிவுகளை எடுப்பீர்கள். அமைதியையம் திருப்தியையும் உணர்வீர்கள்.

உங்கள் திறமைக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு பெறுவீர்கள். பணியின்போது உங்கள் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பீர்கள். இருவரும் சேர்ந்து நண்பர் வீட்டு விழாவுக்கு செல்வீர்கள். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும் இன்று பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று பூரணமான ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். அவநம்பிக்கை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். சம்பவங்கள் மாறாக நடந்தாலும், நம்பிக்கையோடு அதனை எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் சிறப்பான முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உங்களால் பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சலான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் இருக்கும் காரணத்தால் போதிய அளவு பணம் சேமிக்க இயலாது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.இன்று செயல்களில் மும்மரமாக ஈடுபட்டு சாவல்களை சமாளிக்க வேண்டும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். சுமூகமான பலன்கள் கிடைக்க நீங்கள் சிறந்த யுத்திகளைக் கையாள வேண்டும். உங்கள் பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காட்டுவதை தவிர்க்க வேண்டும். உறவின் நல்லிணக்கத்தைப் பேண கவனமாக வாரத்தைகளை பயன்படுத்த வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை. இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் அனுகூலமானதாக இருக்காது. அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும்இருக்க வேண்டியது அவசியம். இன்றைய ஏற்ற இறக்கமான சூழ்நிலைகளை சமாளித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று கவனம் மிகவும் தேவை.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த நீங்கள் முயல வேண்டும். நிதிநிலைமை இன்று அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும். இதனால் அதிருப்தி நிலவும்.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். உங்கள் உடல் நலனைக் காக்க பிரார்தனை மேற்கொள்ளுங்கள் மற்றும் மந்திர உச்சாடனம் செய்யுங்கள்.




இன்று உறுதியான நாள். நம்பிக்கையோடு எடுக்கும் முக்கியமான முடிவுகள் உங்கள் வளர்ச்சிக்கு உதவும். நீங்கள் இன்று உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நம்பிக்கையாக நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்லுறவு பராமரிக்கப்படும்.

பணப்புழக்கம் தேவையைவிட அதிகமாக இருக்கும். பணத்தை சேமித்து பாதுகாப்பை அதிகரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும். நேர்மறை எண்ணங்களால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.02.2024



## தனுசு

இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை அடைய இன்று நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகளின் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்கள் பணியைப் பொருத்தவரை இன்று பாதுகாப்பான நிலையில் இருப்பீர்கள். உங்களின் சிறந்த செயல்திறனுக்கு நற்பெயர் கிடைக்கும்.

குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் உங்களை உற்சாகப்படுத்தும். உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். நிதிநிலை வளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். நிதிநிலையில் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## கும்பம்

உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

பணியிடச் சூழல் அமைதியை அளிக்காது. சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் இடையூறுகள் காணப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பொறுமை இழந்து காணபடுவீர்கள். கவனமற்ற வார்த்தைகளை உங்கள் துணையிடம் உதிர்ப்பீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் அத்தகைய வார்த்தைகளை தவிர்ப்பது நல்லது.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று தேவையற்ற வீணான செலவுகள் காணப்படும். சளி மற்றும் தோல் எரிச்சல்கள் ஏற்படலாம்.



## மகரம்

இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சியில் சில இடையூறுகளை நீங்கள் சந்திக்க நேரும். விவேகமாக சிந்தித்து செயல்படுவது நல்லது.

உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் பேசும் போது கவனம் தேவை. மகிழ்ச்சியை தக்க வைக்க இது மிகவும் அவசியம்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் குறைவு. போதிய அளவு பணம் கையில் இருக்காது.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இன்று தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது உடல் நலத்துக்கு நல்லது.



## மீனம்

இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

உங்கள் பணிகளை இடையூறின்றி ஆற்றுவீர்கள். பல புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசுவீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வர திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.

உங்கள் உடல் நலத்தை சிறந்த முறையில் பராமரிப்பதால் இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் கானப்படுவீர்கள்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thamilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 771 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் போலி விசாக்களுடன் நால்வர் கைது




ஒரு கோடியே 40 லட்சம் ரூபாயை தரகர் ஒருவரிடம் கொடுத்து மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட போலி கிரேக்க நாட்டு விசாக்களுடன் ஐரோப்பா செல்ல முற்பட்ட 4 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

மேற்படி 4 பேரும் நேற்று பஹ்ரைன் வழியாக கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரத்திற்கு செல்ல திட்டமிட்டிருந்த நிலையில், அவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைதானவர்கள் 21 முதல் 47 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் கள அதிகாரிக ளினால் கைது செய்யப்பட்டுள்ள மேற் படி 4 பேரும் விமான நிலைய குற் றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ரஷ்ய - உக்ரைன் சுற்றுலாப் பயணிகளை வெளியேற்றுவதற்கு தீர்மானிக்கவில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

விசா காலம் முடிந்ததாகக் கூறப்படும் ரஷ்ய மற்றும் உக்ரைன் சுற்றுலாப் பயணிகளை 14 நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு கோருவதற்கு எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த விடயம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படும் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரைனிய சுற்றுலாப் பயணிகள் 14 நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அமைச்சரவை அனுமதியின்றி வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னதாக உத்தரவிட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட




விசா நீடிப்புகளை ரத்து செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்குமாறு பரிந்துரை



சம்பள அதிகரிப்பு தொடர்பான அண்மைய சர்ச்சைகள் குறித்து இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை பொது நிதி பற்றிய நாடாளுமன்றக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தனது சமூக தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி தமது ஊழியர்களின் சம்பளத்தை 70 சதவீதம் அதிகரித்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நடவடிக்கை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்நிலையில், மத்திய வங்கியின் ஊழியர்களின் அண்மைய சம்பள திருத்தத்தின் பின்னணியில் உள்ள செயல்முறை மற்றும் நியாயம் குறித்து, பொருத்தமான நாடாளுமன்றக் குழுவின் மூலம் நாடாளுமன்ற உறுப்பி னர்களுக்கு விளக்கமளிப்பதற்கு வாய்ப்பை வழங்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியிடம் எழுத்துமூலக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.